ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|

# The Known and The Unknown

----------------------------------------

## Episode-019 (1 of 2)

### உபநயனம்

=========

**"உபநயனம்"** என்ற சொல்லை **"உப+நயனம்"** என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும். **"உப"** என்ற பதத்திற்கு "ஸமீபத்தில் அல்லது அருகில்" என்ற அர்த்தத்தையும், **"நயனம்"** என்ற சொல்லுக்கு "அழைத்துச் செல்லுதல்" என்ற அர்த்தத்தையும் நம் பூர்வர்கள் அருளிச் செய்திருக்கின்றனர்.

எவருக்கு அருகில் எவரை அழைத்துச் செல்ல வேண்டும் என்ற கேள்வி இங்கு எழுகின்றதல்லவா? ஸ்ம்ருத்யர்த்தஸாரம், **"ஆசார்ய ஸமீப நயனம் வா"** என்று இதற்கு விடை பகருகின்றது. அதாவது, ஆசார்யனையண்டி காயத்ரீ மந்த்ரத்தை உபதேசம் பெற்று, ப்ரஹ்மத்தின் அருகில் செல்வதற்கு உபநயனம் என்று பெயர். இதன் காரணம் கொண்டே, உபநயனத்திற்கு ப்ரஹ்மோபதேசம் என்பதான மற்றும் ஒரு பெயரானது வழங்கப்படுகின்றது.

இப்படி ப்ரஹ்மோபதேசமான ஶிஷ்யனுக்கு ப்ரஹ்மசாரி என்ற பெயரும், அவன் தரிக்கின்ற பூணூலுக்கு ப்ரஹ்மஸூத்ரம் என்ற பெயரும் உண்டு என்பதை நாமனைவரும் அறிவோம். உபநயனம் அல்லது ப்ரஹ்மோபதேசத்திற்குப் பின்னரே வேதாத்யயனம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அதனால் **"வேத ஸமீப நயநம்"** (வேதத்திற்கு அருகில் அழைத்துச் செல்லல்) என்றும் உபநயனம் என்ற பதத்திற்கு அர்த்தம் செய்து கொள்ளலாம். வேதத்திலும் மற்றும் அவற்றின் அந்தங்களான உபநிஷத்துக்களிலும் கூறப்படும் தத்வங்கள் எவை? அவற்றில் சொல்லப்படுகின்ற உயர்ந்ததான பரதத்வம் எது என்பதே உபநயனத்தில் வடுவிற்கு விளக்கப்படுகின்றது.

இவ்விதம் செய்யப்படுகின்ற உபநயனத்தில் **"யஜ்ஞோபவீத தாரணம்"** (பூணூலைத் தரிப்பது) என்பது ஒரு மிக முக்கியமான அங்கமாகும். "யஜ்ஞோபவீதம் என்பதின் பொருள் யாது? அதை ஏன் தரிக்க வேண்டும்?" என்ற கேள்விகள் எழுகின்றதல்லவா? இவற்றைப்பற்றி சிறிது ஆராய்வோம்.

பகவானுக்கு, **"யஜ்ஞ:"** என்பதான ஒரு திருநாமமுண்டு. அப்படிப்பட்ட பகவான் விஷ்ணுவைக் குறித்தே அனைத்து கர்மங்களும் செய்யப்படுவதினால், அந்தக் கர்மங்கள் **"யஜ்ஞங்கள்"** என்று அழைக்கப்படுகின்றன. இக்காரணம் கொண்டே **"யஜ்ஞோ வை விஷ்ணு:"** என்றும் **"யஜ்ஞோ யஜ்ஞபதிர்"** என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. **"உபவீதம்"** என்ற பதத்திற்கு, **"சுற்றியிருக்கும் வஸ்து"** என்று பொருள். இவ்விரண்டு அர்த்தங்களையும் சேர்த்துப் பார்க்கும்பொழுது, யஜ்ஞமாகிய விஷ்ணுவைச் சுற்றியிருப்பதினால் அவ்வஸ்து யஜ்ஞோபவீதம் என்றழைக்கப்படுகின்றது.

நம் ஶரீரத்தின் அங்கங்களான தோள், மார்பு மற்றும் முதுகை சுற்றியல்லவோ யஜ்ஞோபவீதம் இருக்கின்றது. இங்கு பகவான் ஸ்ரீவிஷ்ணு எங்கிருந்து வந்தானென்ற சந்தேகம் எழுகின்றதல்லவா? நம் ஶரீரத்தில் ஹ்ருதய கமலத்தில் அந்தர்யாமியாக பகவான் ஸ்ரீவிஷ்ணு எழுந்தருளியிருக்கிறான். அதனால், நம் அந்தர்யாமியான பகவான் ஸ்ரீவிஷ்ணுவை சுற்றியிருப்பதினால் இதற்கு யஜ்ஞோபவீதமென்ற பெயர் பொருத்தமானதுதானே.

மேலும், **"யஜ்ஞார்த்தம் உபவீதம்"** என்று ஒரு வசனமிருப்பதால், யஜ்ஞங்களைச் செய்வதற்கு அவசியம் வேண்டியது உபவீதமென்பதினால் யஜ்ஞோபவீதமென்று பொருள் கொள்வதில் தவறேதுமில்லையே. இதிலிருந்து நாம் யஜ்ஞோபவீதமில்லாமல் எந்த ஒரு கர்மத்தையும் அநுஷ்டிக்க முடியாதென்பதும் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது.

இந்த யஜ்ஞோபவீதமான பூணூலுக்கு ப்ரஹ்மஸூத்ரம் என்பதான மற்றும் ஒரு பெயரும் உண்டு. **"ஸூசநாத் ஸூத்ரம் இதி ஆஹு:"** என்ற வசனத்தினால், ப்ரஹ்மத்தை ஸூசிப்பது அல்லது உணர்த்துவது ப்ரஹ்மஸூத்ரமாகும். இந்த யஜ்ஞோபவீதம் "எவ்வாறு ப்ரஹ்மத்தை உணர்த்துகிறது?" என்பதை சற்று ஆராய்வோம்.

ப்ரஹ்மஸூத்ரமானது, முப்புரியூட்டினதாகவும் ப்ரஹ்ம முடிச்சுடன் கூடினதாகவும் இருக்கின்றதை நாம் அனைவரும் காண்கின்றோம். இதில் முப்புரியான மூன்று நூல்கள், சித், அசித், ஈஶ்வரன் என்பதான தத்வத்ரயத்தைக் குறிக்கின்றது. ப்ரஹ்ம முடிச்சானது, சித்தும் அசித்தும் ஈஶ்வரனுக்கு ஶரீரமாகவும், அப்படிப்பட்ட சேதநாசேதந விஶிஷ்டமான அந்த ஶரீரத்திற்கு ஈஶ்வரன் ஶரீரியாக (ஆத்மாவாக) இருப்பதான நம் விஶிஷ்டாத்வைதத்தின் ப்ரதாந–ப்ரதிதந்த்ரத்தை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ரம் கூட இந்த விஶிஷ்ட அத்வைதமான பரப்ரஹ்மத்தைத்தானே காட்டுகின்றது.

யஜ்ஞோபவீதத்தை தரிக்கும்பொழுது ப்ரஹ்ம முடிச்சானது ஊர்த்வமாக அதாவது மேல்நோக்கி இருக்கும்படியாக தரிக்க வேண்டும். இந்த மேல்நோக்கிய முடிச்சானது நம்மை ஊர்த்வ கதிக்கு அழைத்துச் செல்வதற்கு அறிகுறியாக இருப்பதாக சான்றோர்கள் கூறுவர். அந்தர்யாமியான பகவான் நித்யவாஸம் செய்கின்ற ஹ்ருதயகமலத்திற்கு நேராக அதாவது மார்பிற்கு நேராக ப்ரஹ்ம முடிச்சு வரும்படியாக யஜ்ஞோபவீதத்தை தரிக்க வேண்டும்.

ஒரு புருஷப்ரஜைக்கு (ஆண்பிள்ளைக்கு) மூன்றாவது வயதில் சௌளம் (சிகை அல்லது குடுமி வைப்பது) என்ற ஸம்ஸ்காரமானது செய்யப்படவேண்டும். இப்படிப்பட்ட சௌளகர்மம் செய்து சிகையை வைத்துக் கொள்ளாதவர்களும், சௌளம் செய்யப்பட்டபோது சிகை வைத்துக்கொண்டு பின்னர் யாதொரு காரணத்திற்காகவோ சிகையை விட்டவர்களும், சிகை வைத்துக் கொண்டால் ஒழிய உபநயனத்திற்கு அநர்ஹர்கள். அவர்களுக்கு உபநயனம் செய்து வைக்கக் கூடாதென்றும், அப்படிச் செய்து வைத்தால் அது வ்யர்த்மாகுமென்றும் (வீணாகுமென்றும்) சாஸ்த்ரம் கூறுகின்றது.

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

**The Known and The Unknown**
**----------------------------------------**
**Episode-019 (2 of 2)**

**உபநயனம்**
**=========**

**"உபநயனம்"** என்ற சொல்லின் விளக்கத்தையும், யஜ்ஞோபவீதத்தைத் தரிப்பது, உபநயனத்தில் ஒரு முக்கியமாக அங்கமென்பதையும் பார்த்தோம். இப்படிப்பட்ட உபநயனத்தை வடுவிற்குச் செய்து வைக்க பிதா, பிதாமஹன், மூத்த சகோதரன், ஆசார்யன் ஆகியோர் க்ரமமான அதிகாரிகள் ஆவர்.

பலன் கொடுக்கத் துவங்கியதான ப்ராரப்த கர்மத்தின் பலனாக ஸரீரத்தை எடுத்துப் பிறகு மரணமடைந்த ஜீவாத்மா, தனது பாப புண்யங்களை, நரகத்திலும் ஸ்வர்க்கத்திலும் அநுபவித்த பின்னர் வானவெளியில் தள்ளப்படுகின்றான். **"லூநபக்ஷ இவாண்டஜ:"** என்கிற வசநப்படி சிறகு ஒடிந்த பக்ஷியைப் போன்று ஸ்தூல ஶரீரமற்றுத் திண்டாடித் திரியும் பாபத்தைச் செய்த ஜீவனுக்கு **"ஶரீரமாத்யம் கலு தர்ம ஸாதநம்"** (ஶரீரமன்றோ முதலாவதான தர்ம ஸாதநம்) என்ற ஶாஸ்த்ர வசநப்படி ஶரீரமில்லாமல் மோக்ஷோபாயங்களை அநுஷ்டிக்க முடியாதென்பதினால், பகவான் மிகுந்த கருணையினால் ஶரீரத்தைக் கொடுப்பதற்காகவே கர்ப்பாதாநத்தைச் செய்விக்கின்றான்.

அப்படி உண்டான கர்ப்பம் ஆண் குழந்தையாக இருக்க வேண்டுமென்பற்காக **"ஸுபர்ணோ(அ)ஸி கருத்மாந்"** என்று தொடங்கும் வேத மந்த்ரங்கள் கர்ப்பம் தரித்தவுடன் செய்யப்படுகின்ற பும்ஸவநத்தின்போது அநுஸந்திக்கப்படுகின்றன. இந்த ஸமயத்திலிருந்து ஜநனம் வரை ஸாத்வீகமான வைஷ்ணவ ப்ரஜைக்கு எம்பெருமான் ஸேவை ஸாதிப்பதை,

> **அன்று கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் கண்டேன்**
> **திருவரங்க மேயான் திசை**

என்று பொய்கையாழ்வார் தனது முதற்றிருவந்தாதி–7வது பாசுரத்திலும்,

> **அன்று கருக்கோட்டியுள் கிடந்து கைதொழுதேன் கண்டேன்**
> **திருக்கோட்டி எந்தை நிறம்**

என்று பூதத்தாழ்வார் தனது இரண்டாந்திருவந்தாதி–87வது பாசுரத்திலும் அருளிச் செய்திருக்கின்றனர்.

இப்படி எம்பெருமானின் ஜாயமான கடாக்ஷத்தைப் பெற்று தாயின் வயிற்றிலிருந்து பிறப்பதே முதற்பிறப்பு. ஆனால் உபநயனமானன் மறுபடியும்

பிறந்தவனாகவே கருதப்படுகின்றான். அதனால்தான் அவன் த்விஜன் அல்லது இரட்டைப் பிறப்பாளன் என்று அழைக்கப்படுகின்றான்.

மேலும், உபநயனம் செய்விக்கப்படுவதால் எப்படி ஒருவன் இரட்டைப் பிறப்பானாகின்றானென்பதை வஸிஷ்ட ஸம்ஹிதை இரண்டாவது அத்யாயத்தின் ஆரம்பத்திலேயே,

**த்வயம் இஹ வை புருஷஸ்ய ரேத: ப்ராஹ்மணஸ்ய ஊர்த்வம் நாபே: அர்வாசீநம் மந்யத| தத் யத் ஊர்த்வம் நாபே: தேநாஸ்ய அநௌரஸீ ப்ரஜா ஜாயதே யத் உபநயதி யத் ஸாது கரோதி| அத யத் அர்வாசீநம் நாபே: தேநாஸ்யௌரஸீ ப்ரஜா ஜாயதே| ஜநந்யாம் ஜநயதி| தஸ்மாத் ஶ்ரோத்ரியம் அநூசாநம் அபுத்ரோ(அ)ஸீதி ந வதந்தி||**

(வேதத்தைக் கற்றுத் தேர்ந்த பிராம்மணனுக்கு நாபிக்கு மேற்பட்டதும் கீஷ்ப்பட்டதுமான இரண்டுவகையான வீர்யங்கள் உள்ளன. ஒரு பிராம்மணனை உபநயனம் செய்வித்து அவனை பரிசுத்தமானவனாக ஆக்கும்போது, அவனுடைய நாபிக்கு மேலேயுள்ள வீர்யத்திலிருந்து ஜ்ஞாந புத்திரன் பிறக்கின்றான். நாபிக்கு கீழ்ப்பட்ட வீர்யத்திலிருந்து ஔரஸ புத்திரன் பிறக்கின்றான். ஆகையினாலே, வேத வேதாந்தங்களைத் தெரிந்துகொண்டு, அத்யயனம் செய்விப்பவனை "நீ பிள்ளை இல்லாதவன்" என்று பெரியோர்கள் கூறமாட்டார்கள்)

என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

பெரும்பாலான உபநயனங்களில் பிதா, ப்ரஹ்மோபதேஶம் (காயத்ரீ மந்த்ரத்தை உபதேஶம்) செய்வதால் அவனே ஆசார்யனாகிறான். **"மந்த்ரோம் மாதா ஆசார்ய பிதா"** என்று வசநமிருப்பதால், உபநயனத்தில் உபதேஶிக்கப்பட்ட மந்த்ரமான காயத்ரீயை மாதாவாகவும், அதை உபதேஶம் செய்த ஆசார்யனைப் பிதாவாகவும் நாம் கொள்ள வேண்டும்.

இவ்விதம் மந்த்ரத்தை மாதாவாகவும் ஆசார்யனைப் பிதாவாகவும் கொண்ட த்விஜன், யஜ்ஞோபவீதத்தை நாபி (தொப்பூழ்) வரையிலும் தொங்கும்படியாக அணிய வேண்டும். நாபிக்கு மேல் உயரம் குறைந்தோ அல்லது நாபிக்குக் கீழே தொங்கும்படியாக அதிக உயரத்துடனோ அணியக்கூடாது.

சாஸ்த்ரம் யஜ்ஞோபவீதம் எவ்விதம் தரிக்கப்படவேண்டுமென்பதை,

**நாபேர் ஊர்த்வநாயுஷ்யமதோ நாபேஸ் தபோக்ஷய:|**
**தஸ்மாந் நாபிஸமம் குர்யாத் உபவீதம் விசக்ஷண:||**

(யஜ்ஞோபவீதம் நாபிக்கு மேலே இருந்தால் ஆயுள் குறைவு ஏற்படும். நாபிக்குக் கீழே தொங்கிக்கொண்டு இருந்தால் தபோநாசம் ஏற்படும். ஆகையினால், அறிவாளியாகவிருப்பவன் நாபிவரையில் தொங்கும்படி மட்டுமே அணிய வேண்டும்)

என்றும், பூணூல் அதிக பருமன் உடையதாகவிருப்பின் அணிபவனின் கீர்த்தியை அபகரிக்கின்றதென்றும், இதற்கு நேர் மாறாக மிகவும் மெல்லியதாகவிருப்பின் அணிபவனின் தனத்தை அபகரிக்கின்றதென்றும்,

**ப்ருஷ்டலம்ஶே ச நாப்யாஞ்ச த்ருதம் யத விந்ததே கடிம்|**
**தத் தார்யம் உபவீதம் ஸ்யாந் நாதோ லம்பம் ந ச உச்சச்ரிதம்||**

(பின்புறம் முதுகெலும்பிலும், முன்புறம் நாபிவரையிலும் பொருந்தும்படியாகவும், இடுப்பைத் தொட்டுக்கொண்டு இருக்கும்படியாகவும் உபவீதமானது இருத்தல் வேண்டும். இதைக்காட்டிலும் தொங்கவோ, மேலே ஏறி இருப்பதுவோ கூடாது)

என்றும், நமக்குத் தெள்ளத் தெளிவாக உபதேசிக்கின்றது.

ஒருவனுக்கு எப்பொழுது, அதாவது எந்த வயதில், உபநயனம் செய்விக்கப்படவேண்டுமென்பதை,

**அஷ்ட வர்ஷம் ப்ராஹ்மணம் உபநயேத்| கர்ப்ப அஷ்டமே வா||**
**ஏகாதஶ வர்ஷம் ராஜந்யம்| த்வாதஶ வர்ஷம் வைஶ்யம்||**

(கர்ப்பத்திலிருந்தோ அல்லது ஜனன தினத்திலிருந்தோ எட்டு வயதான ப்ராஹ்மணனுக்கும், பதினோரு வயதான க்ஷத்ரியனுக்கும், பன்னிரண்டு வயதான வைஶ்யனுக்கும் உபநயனம் செய்ய வேண்டும்)

என்கின்ற வசநம் நமக்குத் தெரிவிக்கின்றது. பதினாறு வயதிற்குள் உபநயனம் செய்யப்படாதவன் வ்ராத்யனாகிறானென்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

கல்யாணமாகாத ப்ரஹ்மசாரிக்கு மூன்று இழைகளாலான ஒரு பூணூலும், க்ரஹஸ்தனுக்கு மூன்று இழைகளாலான இரண்டு பூணூல்களும், உத்தரீயார்த்தம் இரண்டு பூணூல்களுடன் மற்றும் ஒரு மூன்று இழைகளாலான பூணூலும், ஸந்யாஸிக்கு மூன்று இழைகளாலான ஒரு பூணூலுடன் மேலும் ஒற்றை இழையிலான ஒரு பூணூலும் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ளன.

வேறொரு சமயம் பகவத் ஸங்கல்பமிருப்பின், உபநயனம் செய்விக்கும் பொழுது ஓதப்படும் மந்த்ரங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் விசதமாக அறிந்து கொள்வோம்.